செ. கு. எண்: 204 நாள் : 01.08.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 1.8.2013

விருதுநகர் மாவட்டம், நரிக்குடி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. M.முனீஸ்வரன் அவர்கள் 10.7.2013 அன்று திருச்சுழி வட்டம், வீரசோழன் - அபிராமம் சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 14.7.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், பரங்கிப்பேட்டை கிளைச் சிறையில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. D.ராமதாஸ் அவர்கள் 14.7.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. D.அருள்தாஸ் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 19.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், அரசு பொது மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வந்த திரு. S. மணி அவர்கள் 21.7.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், திருவெண்காடு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணிபுரிந்து வந்த திரு. ஆனந்தன் அவர்கள் 21.7.2013 அன்று உடல் நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகரம், தச்சநல்லூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. M.ஷேக் இப்ராஹிம் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 21.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாநகரம், பெருமாள்புரம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சிவபெருமாள் அவர்கள் உடல்நலக் குறைவால் 22.7.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் அருள்தாஸ், மணி; தலைமைக் காவலர்கள் முனீஸ்வரன், ஆனந்தன், சிவபெருமாள்; மற்றும் முதல்நிலைக் காவலர்கள் ராமதாஸ் மற்றும் ஷேக் இப்ராஹிம் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல் நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் அருள்தாஸ்; மணி, தலைமைக் காவலர்கள் ஆனந்தன், சிவபெருமாள்; முதல் நிலைக் காவலர் ஷேக் இப்ராஹிம்; சாலை விபத்தில் உயிரிழந்த தலைமைக் காவலர் முனீஸ்வரன்; மாரடைப்பால் காலமான முதல் நிலைக் காவலர் ராமதாஸ் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9